RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22130

# அபத்தவாதமும் அபத்தக் கதைத்தலைவன் மொர்சோவும்

**இரா. ஸ்ரீவித்யா [அ, *]**

[அ] சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 14, இந்தியா

# Absurdism and the absurd hero Meursault

**R. Srividhya [a, *]**

[a] Department of Tamil, Subramania Bharathi School of Tamil Language and Literature, Pondicherry University, Pondicherry-14, India

* Corresponding Author: rajasekarrajamannar@gmail.com

Received: 02-11-2021
Revised: 07-01-2022
Accepted: 13-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

Albert Camus was awarded the Nobel Prize for literature in 1957. He was born in Algeria, colony of France in 1913. His major contribution for philosophy is his views on the 'absurd'. It means not at all logical or sensible. It is a nihilistic outlook on life which he explored in his novels, plays and essays. What is the meaning of life? For this profound question, three philosophies (Nihilism, Existentialism, Absurdism) have tackled in three ways. Although these three philosophical thoughts are united in that life has no meaning, there are some differences between them. This article explores that distinction. Mainly this article focuses the philosophy of Absurdism and the absurdist protagonist Meursault (In Albert Camus's The Stranger') who expresses that thought.

**Keywords:** Nihilism, Absurdism, Philosophies, Absurdism

## முன்னுரை

1957இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் ஆல்பர்ட் காம்யு ஆவார். அல்ஜீரியாவில் பிறந்த பிரெஞ்சு எழுத்தாளரான காம்யுவின் படைப்புகள் அபத்தவாதத்தை மையமாகக் கொண்டவை. வாழ்க்கையின் பொருளற்ற தன்மையே அபத்தமாகும். அந்நியன் (The Stranger) இவருடைய முதலாவது நாவல் (1942) ஆகும். பிளேக், வீழ்ச்சி ஆகிய நாவல்களும், 'காலிகுலா' முதலிய நாடகங்களும் 'சிசிபஸ் என்ற தொன்மம்', 'கிளர்ச்சியாளன்' ஆகிய தத்துவக் கட்டுரைகளும் இவருடைய படைப்புகளுள் முக்கியமானவையாகும். 'இன்றைய மனிதனின் மனசாட்சி குறித்த பிரச்சினைகளைத் தெளிவாக நேர்மையுடன் விளக்கியிருப்பதற்காக' காம்யுவிற்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது. அவருடைய முதல் படைப்பான 'அந்நியன்' நாவலை பிரெஞ்சிலிருந்து தமிழில் வெ. ஸ்ரீராம் (க்ரியா பதிப்பகம்) மொழிபெயர்த்துள்ளார். தத்துவத்துறைக்கு ஆல்பர்ட் காம்யுவின் பங்களிப்பு, அவருடைய அபத்தவாத சிந்தனையாகும். அந்நியன் நாவலின் கதைத்தலைவன் மொர்சோ, அச்சிந்தனையின் இலக்கியக் குறியீடாக விளங்குகிறான். காம்யுவின் அபத்தவாதம் குறித்தும், அதன் விளக்கப் படைப்பாக விளங்கும் மொர்சோவின் கதாபாத்திரம் குறித்தும் இக்கட்டுரை ஆராய முயல்கிறது.

## காம்யுவின் அந்நியனும் கதைத்தலைவன் மொர்சோவும்

'அந்நியன்' (The Stranger) என்ற நாவலின் தலைப்பு அல்ஜீரில் வசிக்கும் பிரெஞ்சு மனிதனான மொர்சோவைக் குறிக்கிறது. அவனே இந்நாவலின் கதைத்தலைவன் ஆவான்.

'இன்று அம்மா இறந்துவிட்டாள். ஒரு வேளை நேற்றாகவும் இருக்கலாம். எனக்குத் தெரியாது…' (ப. 9) என்ற நாவலின் தொடக்க வரிகள் புகழ்பெற்றவை. இவ்வரிகளிலிருந்தே மெர்சோவின் பண்புநலனை உய்த்தறிய முடிகிறது. நாவல் மரணத்திலிருந்து தொடங்குகிறது. மெர்சோவைத் தவிர அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். மெர்சோவின் தன்மை கூற்று வாயிலாக (First person narrative) நாவல் எடுத்துரைக்கப்படுகிறது.

இயற்கை, மனிதன், சமூகம் ஆகிய யாவற்றிலும் இருந்து விலகிய - அந்நியப்பட்ட மனிதனாக மெர்சோ விளங்குகிறான். மற்றவர்களிடம் ஆழ்ந்த பிணைப்பு இல்லாதவனாக (மகன் - காதலன் - நண்பன்) மெர்சோ வாழ்கிறான். அரேபியனைக் கொன்றதற்காக அவன் கைது செய்யப்பட்டதும் சமூகத்திலிருந்தே அந்நியப்பட்ட மனிதனாகத் திகழ்கிறான். இந்த வாழ்க்கையில் எந்த உள்ளார்ந்த பொருளும் இல்லை என்பது மெர்சோவின் கணிப்பு. இறை நம்பிக்கையற்றவனாக அவன் வாழ்கிறான். மெர்சோவின் முதலாளி, பாரீசுக்குச் செல்லும் வாய்ப்பை அளித்தும், அவன் துளியும் அதில் ஆர்வம் காட்டவில்லை. அதற்காக முதலாளி கடிந்து கொள்கிறார். மெர்சோவைப் பொறுத்தவரை ஓர் ஊரைவிட இன்னொரு ஊர் சிறந்தது எனக் கருதவில்லை.

தாயின் இறுதிச்சடங்கு முடிந்த மறுநாளே மாரியுடன் கடற்கரையில் இன்பம் துய்ப்பது, திரைப்படத்திற்குச் செல்வது, 'பெண்ணை வைத்துப் பிழைப்பு நடத்துபவன்' என்று எல்லோராலும் வெறுக்கப்படும் ரேமோண்ட்டுடன் நட்பு பாராட்டுவது, ரேமோனைப் பின்தொடர்ந்த அராபியனைக் கொன்று மரண தண்டனை பெறுவது வரை மெர்சோவின் செயல்கள் வித்தியாசமானவனாக அவனை அடையாளங் காட்டுகின்றன.

## துன்பியலும் துன்பமற்ற தன்மையும்

"…நான் ஆனந்தமாக இருந்த இக்கடற்கரையின் அசாதாரணமான அமைதி அழிந்துவிட்டது. அப்போது மறுபடியும் நான்கு முறை சுட்டேன். அசைவற்றிருந்த உடலில் சுவடேதும் தோற்றாமல் பதிந்தன தோட்டாக்கள். அதுவே என் துயரத்தின் வாயிற்கதவை நான்கு முறை அடுத்தடுத்துத் தட்டியதுபோல் இருந்தது…" என்று அரேபியரைச் சுட்டுக்கொன்ற மெர்சோவின் கூற்றிலிருந்து நாவல் வெளிப்படுத்தும் துன்பியலை அறிந்துகொள்ள முடிகிறது (Camus & Sriram, 1980). அதே சமயத்தில் மெர்சோவின் துன்பமற்ற மன உணர்வையும் நாவல் வெளிப்படுத்துகிறது. நாவலின் தொடக்கமே மெர்சோவின் தாய் இறந்ததிலிருந்து ஆரம்பிக்கிறது. அவனுடைய தாயாரின் இறுதிச்சடங்கில் ஏனையோரைப் போல் வருத்தப்படாமல் கலந்துகொள்கிற மெர்சோவின் மனோபாவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. இந்த விட்டேற்றியான மனோபாவம் அவனுடைய வழக்கு விசாரணையில் எதிர்தரப்பு வக்கீலால் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டப்படுகிறது. வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கும் இது அதிர்ச்சியை அளிக்கிறது. மெர்சோவின் வாழ்க்கையில் நடக்கும் எல்லா நிகழ்வுகளும் நாவலில் இயல்பாகப் பதிவு செய்யப்படுகின்றன. ஆசிரியர் தன்னுடைய எந்தக் குறுக்கீடும் இல்லாமல் மெர்சோவின் வாழ்க்கையை ஒரு செய்தியாளரைப் போலப் பதிவு செய்கிறார்.

## சூரியனும் கடலும்

நாவல் முழுக்க சூரியனின் வெப்பமும் கடலின் குளுமையும் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தாயாரின் இறுதிச்சடங்கிலிருந்து அரேபியரைச் சுட்டுக்கொன்றது வரை சூரியனின் வெப்பத் தகிப்பு பின்னணியாகச் சுட்டப்படுகிறது. எதிர்க்க முடியாத இயற்கை ஆற்றலாக, விதியை நோக்கிச் செலுத்தும் இயற்கையின் உந்துதலாக வெயிலும், மகிழ்வின் வெளிப்பாடாகக் கடற்கரையும் நாவலில் குறியீடுகளாகச் சுட்டப்படுகின்றன. மெர்சோ தன்னுடைய அபத்தமான வாழ்வை எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதை அறிவதற்குமுன் அபத்த சிந்தனையின் பின்னணியை அறிந்துகொள்வது அவசியமாகிறது.

## சூனியவாதம் - இருத்தலியல்வாதம் - அபத்தவாதம்

மனித வாழ்க்கையின் பொருள் என்ன? நோக்கம் என்ன? ஒரு மனிதருக்கு வாழ்க்கையில் ஏன் துன்பங்கள் நிகழ்கின்றன? மரணத்தை வாழ்க்கையில் எவ்வாறு எதிர்கொள்வது முதலான கேள்விகளை ஆன்மிகவாதிகளும் தத்துவவாதிகளும் வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே எழுப்பியுள்ளனர். தத்தம் நோக்கிலான பதில்களை அளித்துள்ளனர். மேலை தத்துவ வரலாற்றில் மூன்று தத்துவக் கோட்பாடுகள், முக்கியமாக பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சூனியவாதம்(Nihilism), இருத்தலியல்வாதம்(Existentialism), அபத்தவாதம்(Absurdism) ஆகியவை இவற்றுள் முக்கியமானவையாகும்.

சமயத்தை நம்புகிற தனிமனிதனுக்கு இந்த வாழ்க்கை பொருள் பொதிந்த ஒன்றாகும். இந்த வாழ்க்கைக்கு என்று ஒரு நோக்கம், பயன்பாடு இருப்பதாக சமயவாதிகள் நம்புகின்றனர். கிறித்துவத்தைப் பொறுத்தவரை இறுதி தீர்ப்பு நாளில் நல்லவர்கள் சொர்க்கத்திற்கும் அல்லாதவர்கள் நரகத்திற்கும் செல்வர். எனவே, நல்லவனாக வாழ்வது சொர்க்கம் செல்வதற்கு உகந்த வழியாகும். சமண, பௌத்த மதமும் இந்து மதமும் கர்மக்கோட்பாட்டை முன்மொழிகின்றன. மனிதர்கள் தாங்கள் செய்கின்ற வினைகளுக்கு ஏற்ப அவர்களின் பிறப்பும் மறுபிறப்பும் தொடர்கிறது. அதன் முடிவு சொர்க்கமோ, நரகமோ அல்ல. இந்து மதத்தைப் பொறுத்தவரை பிறப்பும் இறப்பும் அற்ற இறுதிநிலை மோட்சமாகும். சமண, பௌத்தத்தைப் பொறுத்தவரை அது நிர்வாணமாகும். எனவே, கீழைத்தேயமாக இருந்தாலும் சரி, மேலைத்தேயமாக இருந்தாலும் சரி, சமயவாதிகளைப் பொறுத்தவரை மனித வாழ்க்கை பொருள் பொதிந்தது, அர்த்தம் நிரம்பியது. கோபர்நிகஸ், டார்வின், நியூட்டன் முதலியோரின் கண்டுபிடிப்புகளால் வளர்ந்த நவீனத்துவ யுகத்தில் இந்தப் பொருள் (வாழ்க்கையின் அர்த்தம் - பயன்பாடு) தவிடுபொடியாகியது. ‘கடவுள் இறந்துவிட்டார்’ என நீட்ஷே அறிவிக்கிறார். கடவுள் இல்லையேல் சொர்க்கம் இல்லை, சொர்க்கம் இல்லையேல் மனித வாழ்க்கைக்கு நோக்கம் என்று ஒன்றில்லை. எனவே, மனித வாழ்க்கை அர்த்தமற்ற ஒன்று என சூனியவாதத்தை முன்மொழிகிறது நீட்ஷேவின் நிஹிலிச தத்துவம்.

மனித வாழ்க்கை சாரம் பொதிந்தது என அரிஸ்டாட்டில் கருதுகிறார். கிறித்துவமோ மனிதர்கள் தங்களின் பாவத்தால் சொர்க்கத்தில் இருந்து பூமிக்கு வீழ்த்தப்பட்டவர்கள். இயேசுவின் அருளால் பாவ விமோசனம் பெற்றுக் கடைத்தேற்றம் அடைவதே மனிதனின் இலக்கு என்கிறது. நிஹிலிசமோ இந்த நம்பிக்கைகள் யாவும் நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ளும் மாயைகள் என்கிறது. மனித வாழ்க்கைக்குப் பொருள் இல்லை. நோக்கம் இல்லை என்கிறது நீட்ஷேயின் சூன்யவாதம்.

சார்த்தரின் இருத்தலியல்வாதமோ இந்தக் கேள்விக்கு ஒரு வகையில் விடைகாண முயல்கிறது. இந்த அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்கின்ற மனிதனுக்கு அர்த்தம் அளிப்பது அவனது இருப்பே(existence) என்கிறார் சார்த்தர். மனிதன் தனது செயல்பாட்டின் மூலம் மனித வாழ்க்கையின் பொருளை உண்டாக்குகிறான். வாழ்க்கையின் அர்த்தம் புறத்தே இல்லை, மனிதன் தனது செயல்பாட்டால் தனது அர்த்தத்தைத் தானே தீர்மானிக்கிறான் என்கிறார் சார்த்தர். எனவே மனிதமே இருத்தலியல்வாதமாக வெளிப்படுகிறது. தங்களுடைய விருப்பம், விழிப்புணர்வு, சுய பொறுப்புணர்வு ஆகியவற்றால் மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்கு (அகவய) அர்த்தத்தை உருவாக்க முடியும் என்கிறது இருத்தலியல்.

அபத்தவாதமும் இருத்தலியல்வாதமும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமானதாக இருப்பினும் இரண்டிற்கும் இடையே நுட்பமான வேறுபாடுகள் உள்ளன. அபத்தவாதத்தைப் பொறுத்தவரை, மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்கு அர்த்தம் காண முற்படுகிறான். ஆனால் யதார்த்த வாழ்க்கையோ குழப்பம் நிறைந்ததாக, அர்த்தம் காண முடியாததாக விளங்குகிறது. மனித வாழ்க்கைக்கு அர்த்தம் காண விழையும் மனித மனத்தேடலுக்கும் குழப்பம் நிறைந்த யதார்த்த உலகிற்கும் இடையேயான முரண்பாடே அபத்தவாதமாக வெளிப்படுகிறது. இந்தக் கொள்கையை உருவாக்கியவர் ஆல்பர்ட் காம்யு ஆவார். இந்த முரண்பாட்டுக்கான தீர்வுகளாக மூன்று நிலைப்பாட்டை காம்யு முன்வைக்கிறார். அவையே நம்முன் உள்ள மூன்று வாய்ப்புகளாக அவர் கருதுகிறார்.

1. **தற்கொலை** - இது வாழ்வின் அபத்தத்திலிருந்து வெளியேறுவதற்குரிய ஒரு வழி. (ஆனால் இது ஒரு வகையான தப்பித்தலே ஒழிய, தீர்வு ஆகாது என்கிறார் காம்யு.)

2. **தத்துவார்த்த தற்கொலை** - அபத்தம் உண்மை அல்ல என்று நம்புவது. அப்படிப்பட்ட தத்துவத்தைத் தழுவுவது தத்துவார்த்த தற்கொலை என்கிறார் காம்யு. நம்மைவிட மேலான ஓர் ஆற்றல் (கடவுள்) மீது நம்பிக்கை வைத்தலைத் (கிறித்துவ நம்பிக்கை - இந்து சமய நம்பிக்கை முதலானவை) தத்துவார்த்த தற்கொலை என்கிறார். வாழ்க்கைக்குப் பொருள் உண்டு, நோக்கம் உண்டு என்று நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் பொய்யே ஒழிய, அதுவும் தீர்வு அல்ல என்கிறார் காம்யு. (கடவுள் இருந்திருந்தால் இந்த உலகில் ஏன் இத்தனை துன்பங்கள் நிகழ்கின்றன? என்கிற கேள்வி எழுகிறது. அப்பொழுது கடவுளின் இருப்பும், கடவுள் குறித்த நம்பிக்கையும் வாழ்க்கையை மேலும் அபத்தத்திற்குள்ளாக்குகிறது.)

3. **அபத்தத்தைத் தழுவுதல்** - அபத்த சிந்தனையை உட்செரித்தால் உள்ளபடியே வாழ்க்கையை சுதந்திரமாக வாழ்கிற வாய்ப்பு ஏற்படுகிறது. புரட்சிகரமாக, அபத்தத்தை எதிர்கொள்வதுதான் நம்முன் உள்ள சரியான வழி என்கிறார் காம்யு. அபத்தம் நிரம்பிய (பொருளற்ற) இந்த மனித வாழ்க்கையை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை சிசிபஸ் என்னும் தொன்மங் கொண்டு விளக்குகிறார் காம்யு.

## சிசிபஸ் தொன்மம்

அபத்த வாழ்வை எதிர்கொள்வது பற்றித் தனது சிசிபஸ் தொன்மம் என்னும் கட்டுரையில் காம்யு விளக்குகிறார். சிசிபஸ் எனும் கிரேக்க தொன்மத்தில் கடவுளால் தண்டிக்கப்பட்ட சிசிபஸ், காம்யுவைப் பொறுத்தவரை ஓர் அபத்தக் கதைத்தலைவன். சிசிபசுக்குக் கடவுள் அளித்த தண்டனை, அவன் மலையடிவாரத்திலிருந்து பாறாங்கல்லை உருட்டிக்கொண்டு மலையுச்சிக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து அப்பாறாங்கல்லைக் கீழே தள்ள வேண்டும். மறுபடியும் கீழிறங்கி வந்து அந்தப் பாறாங்கல்லை உருட்டிக்கொண்டு மேலே செல்ல வேண்டும், மேலிருந்து கீழே போட வேண்டும். இதையே திரும்பத் திரும்பச் செய்கிற பணிதான் சிசிபசுக்குக் கடவுள் அளித்த தண்டனை. 'பயனற்ற உழைப்பே மிகவும் வெறுப்பூட்டுகிற தண்டனை' என்கிறார் காம்யு. ஏன் சிசிபசுக்கு இந்தத் தண்டனை அளிக்கப்பட்டது? என்பதற்கு வேறு வேறான கதை வடிவங்கள் கிரேக்கத்தில் உள. அவற்றுள் ஒன்று,

அசோபசின் மகளாகிய ஏஜினாவை ஜீயஸ் கடத்திச் சென்றுவிடுகிறார். அசோபஸ், கோரிந்த் நகருக்குத் தூய்மையான நீரூற்று அளிக்க சம்மதித்தால் ஏஜினாவை யார் கடத்தியது என்ற உண்மையைத் தான் சொல்வதாக சிசிபஸ் கூறுகிறான். இந்த ஒப்பந்தத்தில் அசோபஸிடம் ஜீயசைப் பற்றிக் கூறிவிடுகிறான். கோரிந்த் மக்களின் நலனுக்காக கடவுளின் கோபத்திற்கு ஆளாகிவிடுகிறான் சிசிபஸ். இது ஒரு கதை வடிவமாகும்.

மற்றொரு கதையில், சிசிபஸ் மரணக் கடவுளைச் சிறைபிடிக்கிறான். அதனால் மனிதர்கள் யாரும் இறப்பே இல்லாமல் வாழ்கின்றனர். கடவுளர்கள் மரணத்தை விடுவிக்க, சிசிபஸ் முதல் பலியாள் ஆகிறான். சிசிபஸ் தனது மனைவியிடம் தான் இறந்தால் எந்த இறுதிச்சடங்கும் மரபார்ந்த முறையில் செய்ய வேண்டாம் எனக் கூறிவிடுகிறான். பாதாள உலகிற்கு வரும் சிசிபஸ், ஹேட்சிடம் (பாதாள உலகின் கடவுள்) தன் மனைவி தனக்கு இறுதிச் சடங்கு செய்யாததால் அவளைத் தண்டிக்க விரும்புவதாகக் கூறி, ஒருமுறை பூமிக்குத் திரும்ப வேண்டுகிறான். ஹேட்சும் சம்மதிக்கவே, பூமிக்குத் திரும்பிய சிசிபஸ், திரும்ப பாதாள உலகிற்குச் செல்லாமல் வயோதிகப் பருவம் வரை அவன் பூமியில் வாழ்ந்ததற்காக, பாதாள உலகின் கடவுளை ஏமாற்றியதற்காக கடவுளர்களால் தண்டிக்கப்படுகிறான்.

காம்யு, சிசிபஸை அபத்தக் கதைத்தலைவனின் மூலபடிமமாக அடையாளங் காண்கிறார். சாவை வெறுத்து, வாழ்வை விரும்பியதற்காக கடவுளால் தண்டிக்கப்பட்டவன் சிசிபஸ். காம்யுவைப் பொறுத்தவரை, சிசிபஸின் மனநிலையே குறிப்பிடத்தகுந்தது. இந்தத் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்ற தனது விதியை நன்கு அறிந்திருந்தும் சிசிபஸ் கவலை கொள்ளவில்லை. மகிழ்ச்சியோடு அந்தத் தண்டனையை மேற்கொள்கிறான். நம்மைத் துன்புறுத்தும் உண்மையை ஏற்றுக்கொள்வதே அந்தத் துன்பத்தை மறக்கடிக்கும் - குறைக்கும் செயலாகும். இடிபசும் சிசிபஸை ஒத்தவனேயாவான். இடிபசும் சிசிபசும் தங்களுடைய விதியை அறிந்து அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார்கள் (Camus, 1990).

மகிழ்ச்சியும் அபத்தமும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. 'சிசிபசின் மகிழ்ச்சியை ஒருவர் நினைத்துப்பார்க்க வேண்டும்' ('One must imagine Sisyphus happy') என்பதே காம்யு விடுக்கும் செய்தியாகும். அபத்தம் நிறைந்த வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான காம்யுவின் தனித்தன்மையான வழியிது.

வாழ்க்கை என்பது ஓர் இடைவிடாத போராட்டம் என்பதை அபத்த கதைத்தலைவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். தன்னுடைய அபத்தநிலை குறித்த முழு விழிப்புணர்வுடன் வாழ்கின்றனர். ஒவ்வொரு தடவையும் பாறாங்கல்லை மலையுச்சிக்குக் கொண்டு செல்லும்போதும் பயனற்ற ஒரு பணியைத் தான் மேற்கொண்டிருப்பதாக உணர்ந்தும் இடைவிடாமல் செயலாற்றிக் கொண்டிருக்கிறான் சிசிபஸ். மலையை விட்டு இறங்கும்போது சிசிபசுக்கு எந்தச் சுமையும் இல்லை. தன்னுடைய உழைப்பிற்கு எந்த ஊதியமோ, பயனுமோ கிடையாது என்பதை நன்கு உணர்ந்திருந்தும் தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருக்கிறான். வாழ்க்கை என்பது ஒரு பயனற்ற போராட்டம் என்பதைத் தெரிந்திருந்தும், நம்பிக்கையற்ற தன்மையோடு வாழ்க்கையை எதிர்கொண்டால், ஒருவருக்கு வாழ்க்கை மீதான அச்சம் ஏற்படாது. இந்தப் புள்ளிதான் ஆல்பர்ட் காம்யுவின் - அபத்தவாத சிந்தனையின் தனித்துவத்தை அடையாளங் காட்டுகிறது.

துன்பத்தை எதிர்கொள்வது எப்படி என்பது புத்தர் காலந்தொட்டு ஒவ்வொரு தத்துவவாதியும் ஒவ்வொரு நோக்கில் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆல்பர்ட் காம்யுவோ, வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள்வதைவிட, நம்பிக்கையற்ற தன்மையோடு எதிர்கொள்பவருக்கு வாழ்க்கை குறித்த, மோசமான விதியைக் குறித்த எந்த அச்சமும் ஏற்படாது என்கிறார். காரணம், நம்பிக்கை, வாழ்க்கையின் போக்கு எப்பொழுதாவது மாறிவிடாதா என்ற ஏக்கத்தை உள்ளீடாகக் கொண்டிருக்கிறது. வாழ்க்கை நம்முடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் மாறாதபொழுது கவலையும் அச்சமும் ஏற்படுகிறது. வாழ்வு நரகமாகிறது. சிசிபஸ் நம்பிக்கையோடு தன்னுடைய தண்டனையை ஏற்றுக்கொண்டிருந்தால் தன்னுடைய வாழ்க்கை எப்பொழுது மாறுதல் பெறும்? எப்பொழுது மேன்மை அடையும் என்கிற அச்சமும் கவலையும் அவனை அரித்துக்கொண்டே இருந்திருக்கும். மாறாக, எந்த நம்பிக்கையும் இல்லாமல், தன்னுடைய தண்டனையை உள்ளவாறே ஏற்றுக்கொண்டதால், கடவுளால் கூட சிசிபஸைத் துன்பத்திற்குள்ளாக்க முடியவில்லை. இடும்பைக்கும் இடும்பை படுத்தியவனாக சிசிபஸ் விளங்குகிறான். இந்த சிசிபஸை எல்லா விதத்திலும் ஒத்தவனாக மொர்சோ விளங்குகிறான். தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை மொர்சோ எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் ஏற்றுக்கொள்கிறான் (Camus, 2013).

"...நான் மாரி இருந்த பக்கம் பார்க்கவேயில்லை. எனக்கு அதற்கு நேரம் இருக்கவில்லை. ஏனென்றால் தலைமை நீதிபதி ஒரு விசித்திரமான வார்த்தைச் சேர்க்கையில் 'பிரெஞ்சு குடியரசின் மக்கள் பெயரால்' ஒரு பொது இடத்தில் என் தலை துண்டிக்கப்படும் என்று அறிவித்தார். அப்போது அங்கிருந்தவர்களின் மனிநிலையை அவர்களின் முகபாவங்களிலிருந்து புரிந்துகொண்டதாக எனக்குப் பட்டது. அவர்கள் எனக்காக இரக்கப்பட்டிருக்க வேண்டும். காவலாளிகள் என்னிடம் மிகவும் உண்மையாக நடந்துகொண்டார்கள். என் வழக்கறிஞர் மணிக்கட்டின்மீது தன் கையை வைத்தார். நான் எந்த ஒரு நினைவுமில்லாமல் இருந்தேன். மேற்கொண்டு நான் சொல்வதற்கு எதுவுமில்லையா என்று என்னைத் தலைமை நீதிபதி கேட்டார். யோசித்தேன். 'இல்லை' என்றேன். அதன்பிறகுதான் என்னை அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள்." (Camus & Sriram, 1980).

சிசிபஸின் பிரதிபலிப்பே மொர்சோ. இறுதிவரை மொர்சோவைப் பாதிரிமாராலும், ஏன் நீதிபதியாலுங்கூட இறைநம்பிக்கை உடையவனாக்க முடியவில்லை.

"...நான் ஒரு புதுவாழ்வைத் தொடங்கத் தயாராக இருப்பதுபோல் உணர்ந்தேன். இந்தக் கோபக் கொந்தளிப்பு என்னைக் கழுவிவிட்டதைப் போல, நம்பிக்கைகள் வெளியேற்றப்பட்ட நிலையில் நட்சத்திரங்களும், மற்ற அறிகுறிகளும் நிரம்பியிருந்த இந்த இரவின் முன்னால் முதல் முறையாக - ஆம், முதல் முறையாக - இவ்வுலகின் மென்மையான அலட்சியத்தை மனம் திறந்து வரவேற்றேன். என்னைப் போலவே அது இருந்தது என்பதை உணரும்போது, அந்தச் சகோதர மனப்பான்மையில் நான்

மகிழ்ச்சியாக இருந்தேன். மகிழ்ச்சியாகவே இருந்து கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டேன்…" (Camus & Sriram, 1980).

நம்பிக்கையற்ற தன்மையில் அலட்சியத்தோடு தன்னுடைய வாழ்வை, தண்டனையை எதிர்கொள்கிறான் மெர்சோ. காம்யு முன்வைக்கும் அபத்தவாத சிந்தனையின் இலக்கியக் குறியீடாக மெர்சோ விளங்குகிறான்.

## முடிவுரை

மனித வாழ்க்கையின் இருப்பை, இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மூன்று சிந்தனைகள் மூன்றுவிதமாக எதிர்கொண்டன. சூனியவாதம், இருத்தலியல்வாதம், அபத்தவாதம் என்கிற அம்மூன்று சிந்தனைகளும் 'மனித வாழ்க்கை அர்த்தமற்றது' என்ற வகையில் ஒற்றுமை உடையதாக காணப்படினும், அவ்வர்த்தத்தை எதிர்கொள்வதிலும் மறுதலிப்பதிலும் தங்களிடையே வேறுபாட்டையும் கொண்டுள்ளன. மனித வாழ்க்கை பொருளற்றது, நிலையானது அன்று என்ற சிந்தனை தமிழ் மரபிற்குப் புதியதன்று. இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என மனித வாழ்வின் நிலையற்ற தன்மையைப் பல முனைகளிலிருந்து நாத்திக சமயங்களாகிய சமணமும் பௌத்தமும் முன்வைத்தாலும், அவை இறுதியில் நிலையாமையின் ஊடாக அறத்தின் நிலைபேற்றை வலியுறுத்தின. மனித வாழ்க்கையின் நோக்கமாய்த் தருமத்தை முன்வைத்தன. ஆனால் மனித வாழ்க்கை அர்த்தமற்றது, அந்த அர்த்தமற்ற வாழ்க்கையை அபத்த விழிப்புணர்வுடன் எதிர்கொள்வதே மனிதனுக்கு முன்னால் உள்ள வழியாக காம்யு முன்மொழிகிறார்.

## References


Camus, A., Sriram, V. (1980) Anniyan, Crea Publication, Chennai, India.

Camus, A. (2013) The myth of Sisyphus, Penguin, UK.

Camus, A. (1990) The myth of Sisyphus, Penguin, London.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License